
# சின்னஞ் சிறிய பூக்கள் - 2



# சின்னஞ்சிறிய பூக்கள் - 2

வெளியீட்டு உதவி

உதவி.uthawi

uthawi.net

வெளியீடு - 3

**நூலின் பெயர்**

சின்னஞ்சிறிய பூக்கள் - 2

**மொழி**

தமிழ்

**தொகுப்பு**

உதவி நண்பர்கள்

**வெளியீட்டு உதவி**

உதவி.நெற்

**முதற் பதிப்பு**

2012 ஐப்பசி

**அச்சகம்**

வணசிங்கா பிறிண்டர்ஸ்.
திருமலை வீதி, மட்டக்களப்பு.

**விலை**

100.00

**Title**

Sinnanssiriya pookkal - 2

**Language**

Tamil

**Published by**

Uthawi.net

**First Edition**

2012 October

**Printers**

Wanasinghe Printers,
Trinco Road, Batticaloa.

**Prize**

100.00

சிறுவர்களுக்காக....

# சின்னஞ்சிறிய பூக்கள். 2

பிள்ளைகளின் மனவெளிப்பாடுகளை எழுத்துக்களில் வடிப்பதற்கு ஊக்கமாக, 2010 இல் மட்/திருப்பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லம், மட்/சந்திவெளி மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் ஆகியவற்றில் பரீட்சார்த்த முயற்சியாக "கதைசொல்லல்" ஆரம்பிக்கப்பட்டது. கதைசொல்லி மூலமாக பிள்ளைகள் மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட (இன, மத, மொழி,சாதி, பால் வேறுபாடுகளற்ற) கதைகளை, கவிதைகளை சொல்லுதலும், அவர்களிடமுள்ள ஆற்றல்களை வெளிப்படுத்த வைத்தலுமாக இச் செயற்பாடு அமைந்திருந்தது. ஒரு வருட செயற்பாட்டின் இறுதியில் பிள்ளைகள் எம்முடன் பகிர்ந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதாய் 2011 இல் " சின்னஞ்சிறியபூக்கள்" ஆவணப்படுத்தப்பட்டது.

பிள்ளைகளின் தேவை கருதி கதைசொல்லலானது, ஒரு வருடத்தின் பின் 2011இல் தேவைப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கி "சொல்லாடல்" என்பதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. சொற்களுடனான பரீட்சயமே ஆக்கத்திறனுக்கான அடிப்படை என்பதனால் பிள்ளைகள் சொற்களை எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் அவற்றைப் புரிந்து கொள்வதற்குமான பயிற்சியாக இது அமைந்திருந்தது.
இரண்டு சிறுவர் இல்லங்களுடன், 2012இல் பட்டிப்பளைப்பிரதேசத்தில் கொல்லனுலை, மாவடிமுன்மாரி, குளுவினமடு, நாற்பதுவட்டை ஆகிய கிராமங்களிலும் இச் செயற்பாடு நடைபெறுகின்றது.

யுத்தத்தினாலும், இயற்கையினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டதன் சாட்சியாய் விளங்குகின்றன இக்கிராமங்கள். இவற்றைவிட இன்னும் பல கிராமங்கள் இருக்கின்றன. ஆனாலும் எந்த விதமான அரசு/அரசு சாரா நிறுவனங்களிடமிருந்தும் நிதி பெற்றுக்கொள்வதில்லை என்ற உறுதியுடன் உதவி இருப்பதால், நிதி என்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. குறித்த எல்லைக்குள் மட்டுமே உதவியினால் தொடர்பினைப் பேண முடிகின்றது.

நகர்ப்புறத்திலிருந்து பல மைல்களுக்கப்பால் காணப்படும் இக்கிராமங்கள் மாறிக் கொண்டிருக்கும் சமூக பொருளாதார சூழலில் மாறாத சமுக அமைப்பாகவே காணப்படுகின்றன. விழிப்புணர்விலிருந்து தள்ளி வைக்கப்பட்டு, தனியே

உழைக்கும் மக்களாக சுரண்டப்பட்டு வரும் இக் கிராமத்தவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி, அவர்களின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகளின்றி வாழ்கின்றனர். கல்வியில் ஈடுபாடின்மை, இள வயதுத் திருமணம் என்பவை சாதாரண நிகழ்வாயுள்ள நிலைமையில் சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைகளும் அதிகமாயுள்ளது. இந் நிலையிலிருந்து சாதகமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் ஒரு பரீட்சார்த்த முயற்சியே கதைசொல்லல் நிகழ்வு.

இதேபோன்று கேகாலை மாவட்டத்தின் எல்லையில் காணப்படும் கந்தலோயாத் தோட்டம் ஏனைய தோட்டங்களை விடவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. உணவு, உடை, உறையுள், நீர், மின்சாரம், போக்குவரத்து முதலிய அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் அந்நியமாய் நிற்கின்றது இத் தோட்டம். இங்குள்ள பாடசாலையில் ஆண்டு-8 வரை மட்டுமே கல்வி கற்கமுடியும். வேறு பாடசாலை சென்று கல்வியைத் தொடர்வதற்கு பொருளாதார வசதி இடங்கொடுப்பதில்லை. இதனால் சிறுவர்கள் கூலி வேலைக்கு செல்வதுடன், துஷ்பிரயோகத்துக்கும் ஆளாகிறார்கள். இந் நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சிறுமுயற்சியே இரு ஆசிரியர்களுக்கான நிதியுதவி. இதன் மூலம் கந்தலோயாத் தோட்டத்து பிள்ளைகள் ஆண்டு- 11 வரை கல்வி கற்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கதைசொல்லல் நிகழ்வின்போது பிள்ளைகள் பகிர்ந்து கொண்ட ஆக்கங்களினதும், கந்தலோயாத் தோட்டத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பகிர்ந்து கொண்ட ஆக்கங்களினதும் தொகுப்பே சின்னஞ்சிறிய பூக்கள் -2. பிள்ளைகளின் எண்ணங்களை இத் தொகுப்பினூடாக ஆவணப்படுத்த முயன்றுள்ளோம்.

இத் தொகுப்பின் ஆக்கங்களை ஒப்பிடுதல், பொதுமைப்படுத்தலை விடவும் அவ்வவ் சமூக பின்னணியில் வைத்து உணர்தலும், வாசித்தலுமே அப் பிள்ளைகளின் தனித்துவத்தையும் அவர்களின் உலகத்தையும் அறிய உதவும். சமூகம் குறித்த அறிதலைப்பெற பிள்ளைகளுக்கு உதவுதலும், அவர்களின் ஆளுமையை மேம்படுத்த உதவுதலும், தம்மைச் சுற்றி நடப்பவைகள் ஏன் என்று கேள்வி கேட்க வைப்பதும் இச் செயற்பாடுகளின் அடிப்படையாகும்.

சிரித்து மகிழ்ந்து

சிந்தைக்கு விருந்தும் தந்து

ஏற்றங்கொண்டு

எழுத்துடிக்கும்

எங்கள் குழந்தைகளின்

எண்ண வண்ணங்களை

எல்லோருக்கும் சொல்லிவிட

எழுத்துருவாக்கி

பகிர்கின்றோம்

உதவி.நண்பர்கள்

## பிள்ளைகளுடன் கொஞ்சம்

உங்களிடமிருந்து மலர்ந்த சின்னஞ்சிறிய பூக்களைப் பார்க்கையில் சந்தோசமாயிருக்கிறது உங்களின் முயற்சியும் நம்பிக்கையும்தான் உங்கள் கையிலுள்ள இந்தப் புத்தகம். இம் முயற்சியின் பயன்கள் அனைத்தும் உங்களுக்குரியதே.. இது ஆரம்பம்தான். அடுத்தமுறை இதைவிடவும் சிறந்த ஆக்கங்களை உங்களால் எழுத முடியும் என்பது எங்களது நம்பிக்கை. இந்தப் புத்தகத்திற்கு எழுத முடியாமல் போனவர்கள் அடுத்த புத்தகத்திற்கு தயாராகுங்கள். சிறந்த கதை,கவிதை, கட்டுரைகளை வாசிப்பதிலும், சிறந்த படங்களைப் பார்ப்பதிலும் நீங்கள் தொடர்ச்சியாக பங்குபற்ற வேண்டும் என்பது எமது விருப்பம். இதற்காக எம்மிடமுள்ள வளங்களுடன் உங்களிடம் நாங்கள் வருகின்றோம். நீங்கள் உலகத்தை வாசிப்பதையும், எழுதுவதையும், உலகைப் பற்றிக் கதைப்பதையும் எதிர்பார்த்து உங்கள் பின்னால் நிற்கும் உதவி.நெற்.

# கவிதைகள்

## காலைப்பொழுது

காலைப் பொழுதிலே
செந்நிறத்திலே அடிவானில்
வீடிவெள்ளி போல்
வீழித்தெழுவான்
அந்த ஞாயிறு!

அந்தப் பொழுதில்
மலர்கள் மலர
மணம் வீசும் ஊரெல்லாம்
மகிழ்ச்சியடைவதைக் காணலாம்

பிறந்த தருணத்தில் இருந்து
இறக்கும் தருணம் வரை
உன்னையே நேசிக்கின்றேன்.

சேவலே
காலைப் பொழுதிலே
சோம்பேறி மக்களை
வீழிக்க வைப்பது நீதான்

S . விவிதா,
தரம் - 8,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டிய.

## கண்ணே எழுந்திடுவாய்

கதிரவன் உதிப்பதைப்பார்!
வானில் உள்ள பனித்துளிகள்
மலரின் மேல் விழுவதைப்பார்!

காகம் வானில் பறப்பதைப்பார்!
பறவைகள் உணவு தேடிச் செல்வதைப்பார்
மேயும் பசுக்களைப் பார்!
கன்று பால் குடிப்பதைப் பார்!

அதிகாலையில் வீசும் சில்லென்ற காற்று
உன் உடலில் உணர்வதைப் பார்!
வயலில் உழவர்கள்
அறுவடை செய்யப் போவதைப்பார்!

சிறுவர்கள் பள்ளி செல்வதைப்பார்!
ஒன்று கூடி விளையாடுவதைப் பார்!

கண்ணே நீ நித்திரை விட்டெழுந்து
வெளியே வந்து இந்த
அழகான காலைக் காட்சியைப் பார்!



M . தர்ஷிகா,
தரம் - 8,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டிய.

# சோர்ந்து விடாதே

சோர்ந்து நிற்காதே நண்பா
இந்த பூமியில் எதற்கு பிறந்தாய்
சோர்ந்து நிற்கவா?
தலை நிமிர்ந்து வாழவா?

வாழ்கை எனும் கடலில் எத்தனையோ
கனவுகள் ஒழிந்து கிடக்கின்றன
அதை நினைவாக்க துணிந்து நில்
முயற்சி செய்
சோர்ந்து நிற்காதே

தோல்வியை எதிர்த்து நில்
வெற்றியை நிலைநாட்டிக்கொள்
துன்பம் வரும்போதெல்லாம்
துணிந்து நில்
தலை நிமிர்ந்து வாழ்வாய்



பா.கீர்த்திகன்,
தரம்-09,
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி.



கு.அன்புராஜ்.
தரம்-08.
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி.


## வாழ்க்கையில் உயர்ந்து நில்

நீ உன்னையே நம்பு
உன் மனதுக்குள் நம்பிக்கையை நிலை நாட்டு
யாரிடமும் கையேந்தி நிற்காதே
யாரிடமும் மண்டியிடாதே

வெற்றியெனும் தீபத்தை நீட்டி
நம்பிக்கையோடு வா
உன்னுடைய வெற்றிதான்
உன் குறிக்கோள்

கல்வி எனும் கடலை கற்று
வாழ்கையில் நிமிர்ந்து நில்
வாழ்கையெனும் சுடரொளியை
தீபமாக ஏந்திக்கொள்

நம்பிக்கையுடன் செயற்பட்டு
நல் வழியில் ஈடுபட்டு
உற்சாகமாய் பாடுபட்டு
உன் வாழ்வில் நீ உயர்ந்து நில்.



சி.கேதீஸ்வரன்,
தரம்-10,
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி.

## சிறப்பாய் வாழு

சின்னப் பாப்பா சொல்வதைக் கேளு
சிந்தனை செய்து சிறப்பாய் வாழு
இன்னல் மறந்து இரசித்தே வாழு
இதமாய்ப் பேசி இனிதாய் வாழு.

மனசில் தீயதை வெறுத்தே வாழு
மாசுகள் இன்றி சிரித்தே வாழு
இனங்கள் பாரப்பதை மறந்தே வாழு
இகத்தில் சாதனை புரிந்தே வாழு

நயமாய்ப் பேசி நலமாய் வாழு
நட்பாய் பழகி உயர்வாய் வாழு
சுயமாய் உழைத்து சுகமாய் வாழு
கயமை நீங்கி கனிவாய் வாழு

உயர்வைக் கண்டாலே போற்றி வாழு
உதவீ செய்து இணைந்து வாழு
முயற்சி செய்து திறமாய் வாழு
முடிவு கண்டு மகிழ்ந்தே வாழு.

A . மகாலெட்சுமி,
தரம் - 08,
கே/தெ'/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

## காகம்

காக்கை நிறம் கருமை
அதன் மேனியோ மென்மை
அதன் குரலோ இனிமை
அதன் பண்போ ஒற்றுமை

காகா...காகா....
குடியைக் கூட்டி
கூடி உணவு உண்டு
கூட்டமாய்தான் வாழும்.

கறுப்பு வண்ணக் காக்கையார்
கண்ணை உருட்டி பார்க்கிறார்.
கூடி நின்று கரைகிறார்.
சனத்தை விழிக்கச் செய்கிறார்.



அ . சுதர்சன்
மட்/கொல்லநுலை வி.வித்

# ஆசைப்படு

ஆசைப்படு பெரிதாய் ஆசைப்படு
அத்தனையும் கைகூடும் முயற்சி எடு
விமானி ஆவதற்கு ஆசைப்படு
விஞ்ஞானி ஆவதற்கு ஆசைப்படு

ஏவுகணை விடுவதற்கு ஆசைப்படு
மருத்துவர் ஆவதற்கு ஆசைப்படு.
ஒற்றுமையாய் போராட ஆசைப்படு
உண்மையாய் இருப்பதற்கு ஆசைப்படு

சின்னச் சின்ன கனவு காண ஆசைப்படு
கனவுகள் நனவாவதற்கு ஆசைப்படு.
கல்வியால் உயர்வதற்கு ஆசைப்படு
கற்றவற்றை பகிர்ந்துவிட ஆசைப்படு

மனிதராய் வாழ்ந்துவிட ஆசைப்படு
தவறுகண்டு தட்டிக் கேட்க ஆசைப்படு
ஆசைப்படு பெரிதாய் ஆசைப்படு
அத்தனையும் கைகூடும் முயற்சி எடு



கு. துஷாந்த்.
ஆண்டு - 11
திருப்பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லம்

## வெற்றிகள் பலவிதம்

புத்தம் புது வருடம் தன்னில்
புதுமை உலகம் தோன்றிட வேணும்
இன மத சாதி சண்டைகள் ஒழிந்திட வேணும்
உலகமெங்கும் சமாதான ஒளிபரவிட வேணும்
ஒன்றுபட்டு யாவரும் வாழ்வதே வெற்றி

போட்டி பொறாமைகள் நீங்கிட வேணும்
பூமியிலே உண்மை அன்பு மலர்ந்திட வேணும்
போட்டிருக்கும் அடிமை விலங்கு அறுந்திட வேணும்
போரின்றி அமைதி வழி அகிலத்தை ஆண்டிட வேணும்
புதுமையீதே, பார் தேடும் வெற்றி.

பள்ளிசெல்லும் ஏழைச் சிறுவர்களுக்கு
பயனுள்ள கல்வி கிடைத்திட வேணும்
பல்கலை கற்று பட்டமும் பெற்று பாரினில்
உயர்ந்து விளங்கிட வேணும்
இதுவே எம் மனம் தேடும் வெற்றி.



கே.லோஜினி.
மட்/ கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.

## அம்மா

பத்து மாதம் சுமந்து
பகல் இரவு பாராது
பசி பிணி பாராது
பார்த்து வளர்த்து
தரணியில் தலை நிமிர்ந்து
வாழ வைத்தவள் அம்மா

பிஞ்சு வயதினிலே நெஞ்சு
நிறையக் கற்று வா என்று
நேசரிக்கு விட்டு
அரிசி மாவும் உருட்டித்தந்தவள்
அம்மா

பின்னேரத்தில் தடியும் புத்தகமும்
எடுத்துக்கொண்டு வாசலில் இருந்து
முதுகு முள்ளு நடுங்க அடித்து
படிக்க வைப்பவள் அம்மா

ஆரம்பப் பள்ளிக்கு அனுப்பி
ஆசிரியரிடமும் அதிபரிடமும் தட்டிக்
கொடுத்து
அடிவாங்கி தந்து
படிக்க வைத்தவள் அம்மா

தலை நிமிர்ந்து
தன்னம்பிக்கையோடு
அனைவருடனும்
சேர்ந்து வாழ வைத்த அம்மாவை
வாழ்வில் என்றும் மறவோம்.

யோ ஜீவன்
கொல்லநுலை வி .வி -ம்

## என்னை வளர்த்தவள்

அன்பின் தாயே!
நீ என்னை பெற்றெடுக்க
பத்து மாசங்கள் சுமந்தாய்
கண்ணீர வடித்து
கஷ்டப்பட்டு வளர்த்தாய்.

இன்று என்னை படிக்கவைக்க
துன்பத்துடன் தேயிலை
பறித்து வேதனை படுகின்றாய்
உமக்கு கோடான
கோடி நன்றிகள் அம்மா!
உன் ஆசைகளை நிறைவேற்றுவேன்.





M . சுரேஸ்குமார்,
தரம் - 09,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

## வழிகாட்டி

அகத்திலே அன்பு வேண்டும்.
அவர் முகத்தில் கருணை வேண்டும்.
ஆணவம் சிறிதும் இன்றி நல்ல
அன்பராய்த் திகழ வேண்டும்.
உதவி பல செய்ய வேண்டும். எந்நாளும்
உண்மையாய் இருக்க வேண்டும்.
நேர்த்தியாய் பாடம் சொல்ல வேண்டும்
நெஞ்சுறுதி கொண்டவராய் இருக்க வேண்டும்
சூழ்நிலை அறிந்து செயற்பட வேண்டும்.
செய்திறன் மிக்கதாய் கற்பிக்கவேண்டும்.
பிள்ளைகளின் மனதை அறிய வேண்டும்
பிள்ளைகளுடன் அன்பாய்ப் பழக வேண்டும்.
பட்டறிவாளராய் இருக்க வேண்டும். நல்ல
பண்புடையவராய் இருக்க வேண்டும்.
பாமர மக்களுக்கும்
படிப்பறிவைப் புகட்ட வேண்டும்.
முன்னின்று காக்கவேண்டும்
எம்மை முன் கொண்டுவர முயற்சி வேண்டும்.
நல்ல மனிதராய் இருக்க வேண்டும்
சக மனிதரில் அன்பு செலுத்த வேண்டும்.



தி.மோகனராஜ்
திருப்பழுகாமம் விபுலாநந்தா
சிறுவர் இல்லம்.
தரம் - 11 வீ,

## ஆசை தரும் அழிவு



கா.திவாகரன்
ஆண்டு -13
திருப்பழுகாமம்
விபுலானந்தா
சிறுவர் இல்லம்

சின்னம் சிறிய உயிர்கள் எல்லாம்
சிறப்பாய் வாழும் இவ்வுலகில்
பென்னம் பெரிய மனிதர் வாழ்வில்
பெரிய பெரிய கவலை ஏன்

எல்லாம் எனது எதுவும் தனது
என்றே மனிதர் பேசுகின்றார்
பணத்தில் ஆசையை வளர்க்கின்றார்
பரிதாபமாய் இறக்கின்றார்

நேரம் செல்லும் வேகம் தனிலே
நோட்டைப் பெருக்க நினைக்கின்றார்
காலம் முழுதும் அதனால் காசைக்
காக்கும் பணியில் நனைகின்றார்

எதிலும் ஆசை வேண்டாம் என்று
தினமும் சொல்லித் திரிகின்றார்
காசே பெரிது அதுவே காக்கும்
என்று தினமும் அழிகின்றார்

இருக்கும் கொஞ்சம் காலம் தனிலே
கடல் போல் ஆசை வளர்க்கின்றார்
இறக்கும் வரைக்கும் ஆசை கொண்டே அவர்
அடியோடு மடிகின்றார்

தி.சிவதரன்
ஆண்டு -13
திருப்பழுகாமம்
விபுலானந்தா
சிறுவர் இல்லம்


## கதை சொல்லல்

கதை சொல்லல் நிகழ்ச்சியே
உனக்கு என் வணக்கம்
சிறுவர்களின் திறமைகளை
வெளிக்காட்டும் ஓர் களம் நீ

சிறுவர்கள் எமது திறமைகளை
வெளிக்காட்டுவது மட்டுமல்லாது
நல்ல பண்புகளையும்
கற்றுக் கொள்கின்றோம்
நாங்கள் என்றும்
உன்னை விரும்புவோம்.

சந்தோசம் இல்லாத சிறுவர்களையும்
நீ சந்தோசப்படுத்துகிறாய்.
சிறுவர்களின் மனங்கவர்ந்த நீ
என்றும். தொடர்வாயாக.
நாங்கள் என்றும் உன்னை
மறக்கமாட்டோம்.

சா.சதீசனா
தரம்-08
மட்- மாவடிமுன்மாரி அ.த.க பாடசாலை



கோ.செல்வகுமார்
ஆண்டு -13
திருப்பழுகாமம்
விபுலானந்தா
சிறுவர் இல்லம்

# கட்டுரைகள்

## எங்கள் ஊரும் எங்கள் வாழ்வும்

01. எழில் கொஞ்சும் மலையகத்திலே பல பின்தங்கிய தோட்டங்கள் காணப்படுகின்றன. அதிலும் மிக பின்தங்கிய தோட்டமாக எமது கந்தலோயா தோட்டம் காணப்படுகின்றது. மலையகம் என்றாலே லாவண்யம்தான். ஆனால் இந்த அழகெல்லாம் இயற்கையால் சூழப்பட்டது. எங்களின் வாழ்க்கை எந்தவிதமான அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் காணப்படுகின்றது. இந்த நவீனகாலத்திலும் குப்பி லாம்பை பற்றவைத்துக்கொண்டுதான் இருக்கின்றோம். எங்கள் சிறுவர்கள் இரவில் நிலவை கூரைவழியாகவே பார்க்கின்றார்கள். மழைக்காலத்தில் ஒழுகும்நீரை பாத்திரங்கள் கொண்டு சேமிக்கின்றார்கள். ஆனால் தோட்ட துரைமார்களை கை எடுத்து வணங்கி கடவுள் போல் நினைக்கின்றார்கள். அவர்களுக்கு அவர்களின் துன்பத்துக்கான காரணமானவர்கள் யாரென்று இன்னும் தெரியவில்லை. தெரியும் தூரத்திலும் இல்லை.....

மு. தீபன்
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டிய.

02. 21ம் நூற்றாண்டானது பல நவீன துறையில் முன்னேறியுள்ளது. பலர் செவ்வாய் கிரகத்திற்கே சென்று விட்டு வருகின்றார்கள். பலவிதமான நவீன துறையில் முன்னேறியுள்ள பல சமூகத்தின் மத்தியில் எனது சமூகம் மட்டும் இன்னும் இருந்த இடத்திலேயே இருக்கின்றது. இன்று மின்னஞ்சல் மூலம் அசூர வேகத்தில் தகவல் தொழிநுட்பம் முன்னேறியுள்ள தறுவாயில் சாதாரண கடிதம் ஒன்று வந்து சேர எங்களுக்கு இருபது நாட்கள் ஆகின்றன. அத்தோடு எனது தோட்டத்தில் உள்ள எவருக்கேனும் நோய்நொடிகள் ஏற்பட்டால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்பே அவர் மரணமடைவதற்கு வாய்ப்பு உண்டு. ஏனெனில் போக்குவரத்து வசதிகள் இல்லை அத்தோடு எங்கள் ஊருக்கும் வைத்தியசாலைக்கும் உள்ள தூரம் 41மைல் ஆகும். எங்கள் தோட்டத்தில் ஒரு பேருந்துதான் காணப்படுகின்றது. இந்த பேருந்து

காலை ஆறு மணிக்கு நகரத்திற்கு புறப்பட்டுச் சென்று மாலை ஆறு மணிக்கே ஊர் வந்து சேரும். எங்களுக்கு மின்சார வசதி இல்லாதால் உலகில் நடக்கும் செய்திகளை அறிந்து கொள்வதற்கு கூட வாய்ப்பில்லை மலையகம் அழகுதான்! ஆனால் எங்களின் வாழ்க்கை முறை துன்பமானது.


ஆ . தயாகரன்,<br>
தரம் - 10,<br>
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,<br>
நாவலப்பிட்டிய.


03. காலைப்பொழுதினிலே நீலநிற கிழக்கு வானில்
செம்மஞ்சள் நிறத்தில் ஓர் சூரியன் உதிப்பான்
அந்நேரம் சேவலும் கூவி தனது
மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்.

அது எங்களையும் எழுப்பி விடும்
பறவைகள் அனைத்தும் தனக்கும்
தனது குஞ்சிகளுக்கும் உணவு
தேடிச் செல்லும்.

வெள்ளை கொக்குகளைப் போல்
சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வார்கள்
எறும்புகளைப் போல்
பெற்றோர்கள் அவசரமாக வேலைகளைச்
செய்வார்கள்.

பெண்கள் கூடையையும், ஆண்கள் மண்வெட்டியையும்
சுமந்து கொண்டு வேலைக்குச்
செல்வார்கள். பிறப்பிலிருந்து இறக்கும் வரை
இதுதான் எங்கள் வாழ்க்கை.


S . சரணியா,<br>
தரம் - 08,<br>
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,<br>
நாவலப்பிட்டிய.

04. எனது தோட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும் மலைகளும், நதிகளும், மரங்களும், செடிகொடிகளும், நீர்வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. எனினும் எமது பிரதேசத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளான மின்சார வசதி, போக்குவரத்துவசதி என்பன காணப்படவில்லை. மின்சாரவசதியினை பொறுத்த வகையில் சூரியசக்தி மின்சாரமே சில வீடுகளில் இருக்கின்றன. சில வீடுகளில் அவ்வசதி இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பெற்றோர்கள் தமது வீட்டு வேலைகளை செய்வதற்கு சிரமத்தை எதிர் கொள்கின்றனர். பாடசாலை செல்லும் பிள்ளைகள் வீட்டுப்பாடவேலைகளைச் செய்யக்கூட முடியாத நிலையில் உள்ளார்கள். போக்குவரத்துவசதியை பொறுத்த மட்டத்தில் மனிதர்கள் வாழ்வதற்கும், பயணம்செய்வதற்கும் பொருத்தமற்ற பாதையாக காணப்படுகின்றன. இதனால் எமதுதோட்டத்தில் இருக்கும் கர்ப்பிணித்தாய்மார்களும், நோயாளிகளும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் எமது மக்கள் அரசியல்வாதிகளிடம் ஏமாந்து போவதாகும். ஏன் என்றால் அரசியல்வாதிகள் நான் உங்களுக்கு பாதையை செய்து தருகின்றேன், மின்சாரவசதியை பெற்றுத் தருகின்றேன் என்று பொய் சொல்வதாகும்.. முக்கியமாக எமது பாடசாலையை எடுத்துக்கொண்டால் தரம் 1 — 10 வரை வகுப்புக்கள் இருக்கின்றன. அதிலும் ஆசிரியர் பற்றாக்குறை, மின்சாரவசதி, கணனிவசதி இல்லை. அப்படி பல சிரமங்களுக்கு மத்தியில் ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கையை மேற்கொள்கின்றார்கள். நாங்களும் பல சிரமங்களுக்கு மத்தியில் படிக்கின்றோம். படித்து எதிர்காலத்தில் எங்கள் தோட்டத்தை நல்லதோர் தோட்டமாக மாற்றி அமைப்பது எங்கள் கனவாகும். இன்று இப்படி இருந்தாலும் என்றோ ஒரு நாள் நாங்களும் படித்து எங்களின் துயரைத் துடைப்போம்.

சு . கஜன்.
தரம் - 08,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

## மலையகப்பெண்

01. இந்த நூற்றாண்டில் பெண்கள் விண்வெளிக்கு கூட சென்று வருகின்றார்கள். ஆனால் எனது சமூகத்திலுள்ள பெண்கள் அவர்களின் வீட்டுப்படியைக்கூட தாண்ட அஞ்சுகின்றனர். பெண்களால் எதையும் செய்ய முடியும் என்று பல நிகழ்வுகள் நடந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் எனது சமூகத்தில் பெண்விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லை. இங்கு பெண்களை அடக்கி வைக்கின்றனர். பெண்களால் எதுவும் செய்ய முடியாதென்று நினைக்கின்றார்கள். அவர்களது சிந்தனைக்கும் ஆற்றலுக்கும் எவரும் மதிப்பளிப்பதில்லை. அதனால்தான் ஆண்கள் சொல்வது சரியோ தவறோ அதை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஆண்களுக்குச் சமமாக பெண்கள் இருக்கின்றார்கள். அது மட்டுமல்லாது ஒரு நிறுவனத்தை கொண்டு நடத்தக் கூடியவர்களாக பெண்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு இருக்கும் போது எனது சமூக பெண்கள் தொன்று தொட்டு வரும் சம்பிரதாய பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பவர்களாக இருக்கின்றனர். கூடையையும் கொழுந்தையும் சுமக்க, பெண் பிள்ளைக்கு எட்டு வயதாகும் போதே முடி வளர்த்து சாமத்திய சடங்குக்காக தயாராகத் தொடங்கும் எமது பெற்றோர்கள் அப் பெண் பிள்ளையின் கல்வி பற்றி சிந்திப்பதில்லை. இதையெல்லாம் நானும் எனது தலைமுறையினரும் சேர்ந்து மாற்றியமைக்க பாடுபடுவோம். எனது அடுத்த தலைமுறையினராவது ஆணாதிக்கத்திற்கு உட்படாமல் சமத்துவமாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும். கொழுந்தும் கூடையை சுமக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆ . துசாந்தினி,
தரம் - 10,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

02. ஒரு நாளில் மலையகப் பெண்ணானவள் அதிகாலை மூன்று மணியளவில் நித்திரை விட்டு எழுவாள். வீட்டு வேலைகளை அவசர அவசரமாக செய்து விட்டு கணவன், பிள்ளைகளுக்கு தேநீர் ஊற்றிக் கொடுப்பாள். ரொட்டி சுட்டு கணவருக்கு கொடுத்துவிட்டு பிள்ளைகளுக்கும் கொடுத்திடுவாள். அவர்களுக்கு பகல் சாப்பாட்டிற்கும் சுற்றிக் கொடுப்பாள். தானும் ஒரு துண்டு ரொட்டியை சாப்பிட்டுவிட்டு தலையில் கொழுந்துக் கூடையையும் கையில் பிள்ளையையும் தூக்கிக் கொண்டு பிள்ளை மடுவத்தை நோக்கி நடப்பாள். குழந்தையை மடுவத்தில் இறக்கிவிட்டு துக்கத்துடன் வேலைக்குச்சென்று கங்காணி கணக்குப்பிள்ளையிடம் ஏச்சு வாங்கி மாலை ஐந்து மணிவரை கொழுந்தெடுப்பாள். பின் அந்திக்கு வந்து பிள்ளை மடுவத்திற்குச் சென்று தான் ஈன்றெடுத்த பிள்ளையை பாசத்துடன் அணைத்துக்கொண்டு தலையில் சருகு கட்டொன்றும் சுமந்து வருவாள். வந்து அடுப்பு புகையிடம் போராடி இரவுக்கு உணவு சமைப்பாள். இரவு ஏழு மணியளவில் கணவன் குடித்துவிட்டு வந்து சண்டை போடுவதையும் சகித்துக்கொண்டு அனைவருக்கும் உணவு பரிமாறி பின் எஞ்சிய உணவை சாப்பிட்டு பாத்திரங்களை கழுவி வைத்துவிட்டு நித்திரைக்கு செல்வாள். என்ன செய்ய, அவளுக்கு இனிவரும் நாட்களும் இவ்வாறுதான் நடக்கப் போகின்றது.




மோ . பிரதாப்,

தரம் - 10,

கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

# மலையக சிறுவர்கள்

மலையக சிறுவர்கள் தங்களது உரிமைகளை பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றார்கள் வறுமையினாலும், இயலாமையினாலும் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு தலைநகருக்கு கடைகளில், வீடுகளில் வேலைக்குச் செல்லும் ஒரு போக்கு காணப்படுகின்றது.

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவது அதிகரித்துள்ளது.


இதனால் சிறுவர்கள் உடல், உள ரீதியில் பாதிப்பு அடைகின்றார்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது தமது வீட்டில் நிறுத்துவதால் சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் அதிகரிக்கின்றது.

எனவே ஒரு பிள்ளை என்ற வகையில் நானும் இதற்கு எனது முழு எதிர்ப்பை தெரிவிக்கின்றேன்.

எதிர்காலத்திலாவது இத் துஷ்பிரயோகத்தை ஒழிக்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

T. உதயனி,
தரம் - 08,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.



கா.ரவிச்சந்திரன்,
விபுலானந்த சிறுவர் இல்லம்
பழுகாமம்.

## நான் எதிர் பார்க்கும் உலகம்

நான், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தை விட வித்தியாசமான ஒரு உலகத்தை எதிர் பார்க்கிறேன். அது எவ்வாறு இருக்கவேண்டும் என்றால் பொறாமையற்ற மனிதர்கள் வாழவேண்டும். நம்பிக்கை துரோகம் செய்யாதவர்களும் ஒற்றுமையான மனிதர்களும் வாழும் உலகமாக இருக்க வேண்டும். தவறு செய்பவர்களை மன்னித்து திருத்துபவர்களாகவும், தவறுகளைத் தட்டிக் கேட்பவர்களாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு இருக்கும் போது நாம் நல்லதோர் உலகத்தைக் காணமுடியும்.

இன்றைய உலகில் பிரச்சினை தோன்றக் காரணம் என்னவென்றால் நான் பெரியவர் எனும் அகந்தையும் என்னைவிட பெரியவர் இல்லை என்ற எண்ணமும் ஆகும். இது இல்லாமலிருக்கையில் பிரச்சினைகளும் இல்லாமலிருக்கும்.

எனவே எமக்கு பிடித்த ஒரு உலகத்தை உருவாக்கிக் கொள்ள எம்மால் முடியும். மனிதர் நாம் நினைத்தால் முடியாதது என்று எதுவும் இல்லை. எனவே இவ்வாறான ஒரு உலகத்தை உருவாக்குவோம்.



செ.ரஜேந்திரன்
தரம்-11
மாணிக்கவாசகர் இல்லம்,
சந்திவெளி.



பெ.ஜெயக்காந்தன்
தரம்-08

# குறுங் கதைகள்

## பழுதடைந்த கிணறு

01. நான் ஒரு பழுதடைந்த கிணறு என் கதையை எல்லோரும் கேளுங்கள். ஒரு அழகான குடும்பத்தில் தனியாக வாழ்ந்தேன். அந்த வீட்டுக்காரர் ஒரு நாள் தனது நண்பர்களுடன் சேர்ந்து என்னிலிருந்து முதன் முதலாக கிடைத்த நீரை சந்தேசமாக குடித்தார். அன்று முதல் பல காலம் சந்தேசமாக இருந்தேன். சில நாட்களுக்கு பிறகு என் வாழ்வில் புயல் காற்று வீசத் தொடங்கியது.

என் வீட்டுக்காரர் ஊரை விட்டு சென்று விட்டார். அவர் இல்லாததால் என்னை யாரும் பயன்படுத்துவதில்லை. இதனால் மனமுடைந்தேன். இவ்வாறு பல நாட்கள் கடந்த பின்பு நான் தனியாகவேயிருந்தேன். ஒரு நாள் என் வீட்டுக்காரர் வருவதைக் கண்டேன். எனக்கு சந்தோசமாக இருந்தது. இருந்த போதிலும் வீட்டில் உள்ள பொருட்களை ஏற்றிச் செல்வதைக் கண்டதும் என் மனம் மிகவும் வேதனைப்பட்டது. எனக்கு உயிர் இருந்திருந்தால் நானும் வருவதாக சொல்லியிருப்பேன். எனக்கு வழியோரமாக வரும் சிறுவர்களுக்கு என்னை அசுத்தப்படுத்தி கற்களை எறிவதும் குப்பையைப் போடுவதுமே வேலையாக இருந்தது. அவர்களின் செயற்பாட்டால் குப்பைகூழங்களால் நான் நிறைந்து விட்டேன். இதனால் நான் யாருக்கும் உதவாத பழுதடைந்த கிணறாக மாறிவிட்டேன்.

யோ.கொவி
தரம் - 7,
மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம்,
சந்திவெளி

## ஊர்க்குருவியின் உரையாடல்

02. நான் சென்ற வருடம் இறுதிப் பரீட்சை நிறைவடைந்ததும் இல்லத்திலிருந்து அம்மாவையும் உறவினர்களையும் காணவேண்டும் என்ற ஆவலுடன் எனது ஊருக்குச் சென்றேன். அங்கு சென்று சில நாட்கள் வீட்டில் அனைவருடனும் சந்தோசமாக இருந்தேன். அன்று ஒரு நாள் எங்களது குடிசை வீட்டிக்கு அருகே அந்தி மாலைப் பொழுதில் அமர்ந்திருந்தேன். அப்போது இரண்டு ஊர்க்குருவிகள் பேசிக்கொண்டிருந்தன. அவற்றுக்கும் இந்த உலகத்தில் நடை பெறுகின்ற நிகழ்வுகள் எல்லாம் தெரிந்துள்ளதே என்று நினைக்கும் போது எனக்கு மிகவும் சந்தோசமாகத்தான் இருந்தது.

ஆகா நான் சொல்ல வந்த விடயத்தை மறந்துவிட்டேன். செல்கிறேன் கேளுங்கள் சிட்டுக்குருவி ஒன்று பேசியது.

'நான் நேற்று இரவு தங்குவதற்கு ஒரு வீட்டுக்குச் சென்றேன். அந்த வீட்டில் தகப்பன் மது அருந்தியிருந்தார். அப்போது வீட்டில் சிறுவன் படித்துக் கொண்டிருந்தார். தகப்பன் போடுகின்ற சத்தத்தால் இளம் பிஞ்சு பயத்தால் நடுங்கியது. அதைப் பார்த்த போது, மனிதராக பிறந்திருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்த எனக்கு பறவையாக இருப்பதே நல்லது என தோன்றுகிறது' என்றது.

மற்றைய குருவியும் 'நானும் சென்ற கிழமை காலையில் ஒரு மரத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு சிறுவன் பாடசாலை செல்ல ஆயத்தமானான். பாடசாலைக்கு சென்று என்ன செய்யப்போகிறாய் உன் அப்பாவுக்கு சோறு எடுத்துச் செல். அப்போதுதான் அப்பாவுடன் இணைந்து வேலை செய்யலாம். பள்ளிக்கூடம் சென்று என்ன பிரயோசனம் என்றாள் அவனின் தாய். சிறுவன் தனக்கு இயலாது என்றான். இருந்தும் தாயின் கட்டாயப்படுத்தலில் அழுதழுது சென்றான். அப்போது என்னுள்ளம் கலங்கியது. என்ன செய்வதென்றே தெரியாமல் இருந்தது. இதை நினைக்கும் போது சிறுவர்கள் இந்த உலகில் பாதிக்கப்படுவது தெரிகிறது.என்றது.

இவ்வாறு இரு குருவிகளும் பேசிக்கொண்டன. இதைக் கேட்டதும் பறவைகளுக்கும் சிந்திக்கும் ஆற்றல் இருக்குத்தானே என்று நினைத்தேன்..

செ.ரஜேந்திரன்
தரம்-11
மாணிக்கவாசகர் இல்லம்

## அனுபவம் பேசல்

01. நான் மிகவும் பின்தங்கிய தோட்டமான கந்தலோயா தோட்டத்தில் வசிக்கின்றேன். எனது பெற்றோர்கள் தோட்ட தொழிலாளர்கள்.எனது குடும்பத்தில் அம்மா, அப்பாவுடன் நானும் எனது அண்ணனும்தான். எனது குடும்பமானது மிகவும் சிறியது. நாங்கள் அன்றாட ஒருவேளை சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டு பத்தும் பத்தாமல் சாப்பிடுவோம். அத்தருணம் கஷ்டப்பட்டாலும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். இவ்வாறு இருந்து வந்தபோது சிறிய சண்டையின் காரணத்தால் எனது அப்பா வேறு ஒரு திருமணம் முடித்து எங்களைவிட்டு சென்று விட்டார். எனது அம்மா என்ன செய்வது என்று தெரியாமல் அழுது புலம்பினார். எனது அம்மா அப்பாவை காதல் திருமணம் செய்துகொண்ட காரணத்தினால் அம்மாவின் குடும்பத்தில் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. நானும் அண்ணனும் அம்மாவும் கண்ணீரோடு நடுத்தெருவில் நின்று கொண்டிருந்தோம். நானும் அண்ணனும் பசியால் வாடினோம். கத்தினோம் கதறினோம். எங்கள் பசியை எங்களால் அடக்க முடியவில்லை. எனது அம்மா அயலவர்களிடம் உதவி கேட்டார். அவர்களிடம் உதவி கிடைத்தது. அதற்குப் பிறகு எனது குடும்ப வறுமையை கருதி அண்ணா பாடசாலையை நிறுத்தி விட்டு வேலைக்குச் சென்றார். சென்றவர் சென்றவர்தான் இன்னும் வரவில்லை. நானும் பாடசாலையை விட்டு விட்டு வீட்டில் இருந்தேன். என்ன செய்வது எனத் தெரியாது. நானும் அம்மாவும் தனிமையில் வாழ்கின்றோம். எனது பாடசாலை அதிபரின் அறிவுரையை கேட்ட எனது அம்மா எவ்வளவு வறுமையாக இருந்தாலும் வாழ்க்கைக்கு கல்வி தேவை என்று என்னை மீண்டும் பாடசாலையில் சேர்த்தார். இன்று நான் தரம் 10 ல் நன்றாகப் படிக்கின்றேன். நான் படித்து பெரியவளாகி எனது அம்மாவின் துயரத்தை நீக்கி நன்றாக வாழவைப்பேன். இதுவே என் நோக்கம்.

S. வசந்தகுமாரி,
தரம் - 10,
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

02. கந்தலோயா தோட்டத்திலுள்ள கந்தலோயா தமிழ் வித்தியாலயம்தான் எனது பாடசாலை. நான் பாடசாலையை விட்டு சிறிது காலம் வீட்டில் இருந்த பொழுது எனது நண்பர்களும், நண்பிகளும் பாடசாலை செல்வதை பார்த்திடுகையில் மிகவும் மன வேதனையாக இருந்தது. எனது பாடசாலையில் தரம் 1 – 8 வரையில்தான் முன்னர் வகுப்புக்கள் இருந்தது. நான் 8ம் தரம் கல்வி கற்று முடித்தவுடன் மேலதிக கல்வி கற்பதற்கு எனக்கு வசதியில்லை. எனது அப்பா எனக்கு ஆறு வயது இருக்கும் போதே மரத்திலிருந்து விழுந்து இறந்து விட்டார். எனது அம்மா ஒரு தோட்ட தொழிலாளி. எனக்கு இரண்டு அண்ணன், ஒரு அண்ணன் கொழும்பில் வேலை செய்கின்றார். மற்றொரு அண்ணன் மன நோயாளியாக வீட்டில் இருக்கின்றார். இந்த சூழ்நிலையில் எனது மேலதிக படிப்பை மேற்கொள்ள முடியாத காரணத்தினாலே ஒரு வருட காலமாக வீட்டில் இருந்தேன். பாடசாலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் எனது நண்பர்கள், நண்பிகள் வந்து சொல்வார்கள். அதை கேட்கும் போது மறுபடியும் பாடசாலை செல்லமாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருப்பேன். அதன்பின்தான் எங்கள் பாடசாலையில் தரம் 1 – 11 வைக்கப்போவதாக கேள்விப்பட்டேன். அதற்கு பிறகு எனது அம்மாவும் நானும் வந்து அதிபரிடம் உரையாடிவிட்டு மீண்டும் நான் மிகவும் மகிழ்ச்சியாக பாடசாலைக்கு சென்றேன். இப்போதெல்லாம் நான் ஒழுங்காகப் பாடசாலைக்கு சமூகமளிப்பதோடு நன்றாகவும் கல்வி கற்கின்றேன்.

S . திரேஸா.
தரம் - 10.
கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,
நாவலப்பிட்டிய.

## அம்மா...

03. டும் டும்' என்ற சத்தம் கேட்டது. திடுக்கிட்டு போர்வையை மெதுவாக விலக்கி எழுந்தேன். என் அம்மா ஐயோ ஐயோ என்ற சத்தத்துடன் அலறினாள். நான் மெதுவாக ஓடிச் சென்று பார்த்தேன். அம்மாவைக் காணவில்லை. என் அப்பா இறந்து கிடந்தார். ஊரில் இருந்த மக்கள் எல்லோரும் அலறிக்கொண்டு ஓடினர். எனக்குப் பயமாக இருந்தது. யாரோ சிலர் பச்சை நிற உடை அணிந்து கையில் பல பல நவீன ஆயுதங்கள் வைத்து பல பெண்களைத் தூக்கிக்கொண்டு சென்றனர். என் அம்மாவையும் அவர்கள்தான் தூக்கிக்கொண்டு சென்றிருப்பார்கள் என்று நினைத்தேன்.

அங்கு என் அம்மா உயிரோடு இருப்பாரா? என்ற எண்ணம் என்னை வாட்டியது. ஒரு ஆயுததாரி என் முன்னே சென்றார். அவர் பின்னே சென்றேன். அவர் ஒரு அடர்ந்த காட்டினுள் சென்று மலைக் குகையினுள் இறங்கினார். எனக்கு இறங்கப் பயமாக இருந்தது. உடனே வேறு வழி தேடிச் சென்றேன். ஒரு வழிகூட இல்லை.ஐயோ ஐயோ என்ற ஒலி கேட்டது. அது என் அம்மாவா என்று பார்க்கப்போனேன். அம்மாவைக் காணவில்லை. ஏமாந்துவிட்டேன். அங்குமிங்கும் அலைந்தேன். கடைசியில் அழுகைதான் மிஞ்சியது.

என் அம்மா எங்கே?


பே.கோகுலவர்மன்,

தரம் - 9

பழுகாமம் விபுலாநந்தா சிறுவர் இல்லம்.





J.அருள்குமார்,

தரம் - 9

கே/தெஹி/கந்தலோயா தமிழ் வித்தியாலயம்,

நாவலப்பிட்டிய.

## அப்பா.....

04. டொப் டொப் என்று ஒரு சத்தம் கேட்டது. நான் வீட்டினுள் இருந்து வெளியே ஓடிச் சென்று பார்த்தேன். எனது தந்தை மது அருந்தி விட்டு, தள்ளாடித் தள்ளாடி வருவதைக் கண்டேன்.உடனே நான் உள்ளே ஓடி அப்பா வருகிறார் என்று அம்மாவிடம் சொன்னேன். அந்த நேரம் மாமாவும் எங்களது வீட்டில் இருந்தார். வீட்டின் கதவு பூட்டியிருந்தது. சத்தம் கேட்டு நாங்கள் கதவைத் திறப்பதற்கிடையில் அப்பா கதவை உடைத்துவிட்டு உள்ளே வந்துவிட்டார். வந்ததும் மாமாவுடன் சண்டை போட்டார். அந்த நேரம் நான் வீட்டின் மூலைக்குள் ஒடுங்கி நடுங்கி நின்றேன்.

டேய் மோகன் இங்க வாடா என்று கூப்பிட்டார். நான் நடுங்கி நடுங்கிச் சென்று என்ன என்று கேட்டேன். என்னிடம் பணத்தைத் தந்து சாராயம் வாங்கி வா என்று சொன்னார். நான் இயலாது என்று சொல்ல ஓங்கி எனக்கு உதைத்தார். அப்பா என்னை உதைக்க மாமா அப்பாவை பிடித்து அறைந்தார். அப்பாவும் எழும்பி மாமாவுக்கு அறைந்தார். சண்டை தொடர்ந்தது. அம்மா தம்பியுடன் சென்று சண்டையை விலக்கினார். சண்டையை விலக்கிய அம்மாவுக்கு ஓங்கி வயிற்றில் உதைத்தார் அப்பா. எனக்குக் கடும் கோபம் வந்தது. அருகில் இருந்த மேசைக் காலைக் கழற்றி ஓங்கி அப்பாவின் தலையில் அடித்தேன். அப்பா இரத்தம் கக்கி இறந்துவிட்டார். நான் சிறைக்கு அனுப்பப்பட்டேன்.



ரீ. சிந்துஜன்,
பழுகாமம் விபுலாநந்தா சிறுவர்
இல்லம்.

**விமர்சனம்**

## குழந்தைகளின் சொர்க்கம் [ஈரானிய திரைப்படம்]

1. வேறு பாடசாலை ஆசிரியர்கள் வந்து தொலைக்காட்சியில் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சி நட த்தப்போவதாக எங்கள் ஆசிரியர் கூறினார். நாங்கள் பெரும் ஆவலோடு இருந்தோம். சிறிது நேரத்தின் பின்னர் ஆசிரியர்கள் வருகை தந்து தொலைக்காட்சியில் படத்தைப் போட்டனர். நாங்கள் அனைவரும் மிக அமைதியாகப் பார்த்தோம்.

அப் படத்தில் பாடசாலை செல்லும் 2 பிள்ளைகள் பற்றியே கூறப்பட்டிருந்தது. நாங்கள் நினைத்ததை விட மிகவும் நன்றாக இருந்தது. ஒரு பாதணியை இருவரும் பாவிக்கின்றனர். பெண்பிள்ளை வீட்டு வேலை செய்துகொண்டும், ஆண்பிள்ளை தன் தந்தைக்கு உதவி செய்தும் அந்த கஸ்ரமான குடும்பத்தில் வாழ்ந்து கொண்டு கல்வி கற்பதை நினைத்தால் மிகவும் கவலையாய் உள்ளது. எவ்வளவோ முயன்றும் ஒரு பாதணியை வாங்க முடியவில்லை. தமிழ் சினிமா திரைப்படத்தில் கதாநாயகன் வெல்லுவார் ஆனால் இந்தப் படத்தில் தோல்வியே எடுத்துக் காட்டப்படுகின்றது.

தமிழ் சினிமா பார்ப்பதைவிட இவ்வாறான படங்களை பார்ப்பதே மேலானது. கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சிறந்ததாகும். பார்த்தால் எங்களுக்கு மாற்றங்கள் ஏற்படலாம். எந்தவொரு பிரச்சனை வந்தாலும் எவ்வாறான தேவைகள் ஏற்பட்டாலும் கல்வியைத் தொடர்ந்து கற்க வேண்டும். ஆகவே கல்வியைக் கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

கோசலாதேவி



2 அந்த சிறுவர்களின் குடும்பமானது மிகவும் கஸ்ரப்பட்ட குடும்பமாகும். அதில் அச் சிறுமி வீட்டு வேலையைச் செய்து விட்டுதான் பாடசாலைக்கு செல்கிறாள். அச் சிறுவனானவன் தனது தந்தையுடன் வெளி நகருக்கு சென்று வேலைகளை மேற்கொள்கின்றான். அதிலும் அச் சிறுவர்கள் இருவரும் ஒரு பாதணிகளை வைத்துக் கொண்டே மிகவும் கஸ்ர நிலையில் அப்பாதணிகளை மாற்றி மாற்றி பாடசாலைக்கு அணிந்து கொண்டு செல்கின்றனர். இதனால் அச்சிறுவன் பாடசாலைக்கு செல்லும் நேரம் தாமதம் அடைகின்றது. இன்னிலையில் அச் சிறுவன் ஒரு விளம்பரத்தில் பாதணிக்கான ஓட்ட பந்தயத்தை அறிந்து அதில் அவன் பாதணியை பெற்றுக் கொள்வதற்காக போட்டியில் கலந்து கொண்டு பெரும் சிரமங்கள் மத்தியில் வெற்றி அடைகிறான். ஆனால் அச் சிறுவனுக்கு தங்கப் பதக்கமும் சான்றிதழும் மட்டுமே வழங்கப்பட்டது. அவன் எண்ணிய பாதணி கொடுக்கப்படவில்லை. போட்டியில் கலந்து கொண்டதால் இருந்த பாதணியும் கிழிந்து போய்விட்டது. இதனை நினைத்து சிறுவன் கவலை அடைகின்றான்.
அதனைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. அத்தோடு இதனைப்பார்த்து கொண்டு இருந்த போது மனதுக்குள் ஏதோ ஒரு சஞ்சலமாய் இருந்தது.

அத்தோடு அச் சிறுவனின் எதிர்பார்ப்பு தோல்வி அடைகின்றது. அச் சிறுவர்கள் பாதணி இருந்திருந்தால் பாடசாலைக்கு நன்றாக சென்று படித்திருப்பார்கள். இக் கஸ்ர நிலையிலும் அவர்களின் கற்கும் ஆர்வம் என்பன உணரப்படுகின்றது. இதன் மூலம் எனக்கு எப்படி கஸ்ரப்பட்டாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் என் மனதில் தோன்றுகின்றது.

நாம் எவ்வாறு கஸ்ர நிலையில் இருந்தாலும் எம் மனதை தளர விடாமல் எச் சவால்களிலும் வெற்றி அடைந்து எனது இலட்சியத்தை அடைவேன் என்பது உறுதியாக எனக்கு உள்ளது.

சி.யோகா



## குறிப்பு

கட்டிடம் கட்டுதலும் கணணிகள் வாங்கிக் கொடுப்பதுவும் மட்டும் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு ஆதரவாகிவிடாது. சமூகம் குறித்த அறிதலும் அது குறித்த தேடலுமே பிள்ளைகளின் மனதை வளப்படுத்தும். பிள்ளைகளின் ஆற்றலை வலுப்படுத்துவதற்கான எமது பரீட்சார்த்த முயற்சியே கதைசொல்லுதலும், உலக சினிமாவும் . இம் முயற்சியை நடைமுறைப்படுத்த உதவிய கதைசொல்லிகள், சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள், பங்கெடுத்த சிறுவர்கள், நிதியினைத் தந்துதவிய உதவி நண்பர்கள், அனைவருக்கும் எமது நன்றிகள்.

இதுபோன்ற முயற்சிகளில் எமக்கு ஈடுபாடு உள்ள போதும் மிகக் குறைந்த நிதி வளத்துடன் செயற்படும் எம்மால் அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த முடிவதில்லை. சமூக அக்கறை உள்ளவர்களின் உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்....

இந்நூல் குறித்த உங்கள் கருத்துக்கள்/விமர்சனங்கள்/ஆலோசனைகளை எமக்குத் அனுப்பி வையுங்கள்.

உதவி.நெற்

சிரித்து மகிழ்ந்து
சிந்தைக்கு விருந்தும் தந்து
ஏற்றங் கொண்டு
எழுத்துழக்கும்
எங்கள் குழந்தைகளின்
எண்ண வண்ணங்களை
எல்லோருக்கும் சொல்லிவிட
எழுத்துருவாக்கி
பகிர்கின்றோம்

உதவி uthavi

